226-12/49 VIDUTHALAI

விநோதத்து

ஒரு நாடகம்

(பக்கம் 1-7)

226-12

49

ஓம்

ஜகத்சித்ர — நாடகம்.

அங்கம் 1, காட்சி 1.

இடம் — வானுலகம்

காலம் — நிலவேளை

ஆள் — இந்திரன், வாயு, அக்கினி, ~~[illegible]~~ (சூரியன்), சோம இரட்டையர் (அசுவினி தேவர்)

மருத்துக்கள், வசுக்கள், ஆதித்யர், முதலியோரை. (சாதுவே தேவர்).

இந்திரன் — உமக்கு நன்று, தோழரே.

மற்ற தேவர் — தோழா, உனக்கு நன்று.

இந் :— ~~நான் சொல்லவந்தது~~ பரமதேவன் ~~[illegible]~~ பணியிட்டான்

மற்றோர் :— யாதெனம்?

இந் :— "மண்ணுலகத்து மானுடர் தம்மைக்
கட்டிய தளையெலாம் சிதறுக" என்று.

அக்கி :— வாழ்க தந்தை; மானுடர் வாழ்க.

மற்றோர் :— தந்தை வாழ்க தனிமுதல் வாழ்க.
~~[illegible]~~ உண்மை வாழ்க உலக மெல்லாம்.
தீது கெடுக. நன்மை வளர்க.

சோம :— உண்மையும் அறிவும் இன்பமு மாகி
பல வெனத் தோன்றிப் பலவினை செய்து
பல பயன் உண்ணும் பரமனைப் போற்றி

உயிர்க் கொலைத் தீமையை, உயிர்க் கொலைத் தீமை
உயிர்க் கொலைத் தீவினை, உயிர்க் கொலைத் துன்பமே
உயிர்க் கொலைப் பயனை, உயிர்க் கொலைப் பகைமை
அறிவாலே வென்று போற்றி
தெளிவின் வலிமையின் நேர்படச் செய்வோம்.

கிளி :- நன்று, தோழரே, அமிழ்துண்போம்.

மற்றோர் :- அமிழ்து நன்றே. ஆம். அஃதுண்போம்
(எல்லாரும் அமிர்தபானம் செய்கிறார்கள்.)

இந்திரன் :- நித்தமே வாழ்க.

வாயு :- நித்தமே புதிது.

அக்கி :- தீர விளைவு,

இடி :- மாறு இன்பம்.

மழை :- எதுவும் இனிமை.

வெளி :- என்றும் தெளிவு.

அக்கி :- மண்ணுலகத்து மாதர் வயிற்றில்
தோன்றும் பாலரில் பசித்தவர் போக்குக.

இந் :- மண்ணுலகத்து மக்களே கேளீர்
இன்பம் வேண்டுவீர், எண்ணிய பெறுவீர்.
செயல்பல செய்வீர், மெய்மையால் இருப்பீர்
எண்ணமே திறல் ஏதுவே விளையும்

விருந்துதவ வேண்டேன் மீளவு மறப்பீர்,
தோழரென் றெம்மை நித்தமுஞ் சார்ந்தீர்.
சோமம் பாலொடு செல்வமு தந்தீர்,
நும்மையே அடைந்தார் நோவுறச் செய்வரோ?
ஆஆ! மானுடர் நெஞ்சமா, அரக்கா,
விருத்திரா, வெளியினை மறைத்திடும் வேடா,
நமுசிப் புழுவே, வலனே, நிலைபெறுந்
துன்பமே, அச்சமே, மிடியே, சோம்பர்காள்,
பெயர்பல கட்டும் ஒரு கொடும் பேயே,
உருப்பல கட்டும் ஒரு புலைப் பாம்பே,
படைபல கொணர்ந்து மயக்கிடும் பாழே,
ஓடா, விழுந்தனை, யாவரும் விழுந்தீர்.
அரக்கரே மனித ருளமெனுங் கோயிலை
விட்டு நீ ரொழிந்திடல் வேண்டும் பொன்னுலக
மேன்மை நான் தொடங்கி மானுடர் தமக்கே
ஈந்திட நினைத்து நம் செய்தவை யெல்லாம்
மோசக் கடும்புலி விருத்திரன் கெடுத்தான்.
“வலியிலார் தேவர்; வலியவர் அரக்கர்
அறமே நொய்யது; மறமே வலியது
மெய்யே சோர்ந்தது; பொய்யே வென்று

இன்பமே சொல்வது; துன்பமே வெல்வது"
என்றோர் வார்த்தையும் பிறந்தது மண்மேல்.
மானுடர் நினைத்தார்; மந்திரத் தொழிலாம்
விசுவாமித்திரன், வசிட்டன், கபிலன்
முதலியோர் செய்த முறைமை மறைந்தது.
பொய்ந்நூல் பெருகின புவியின் கண்ணே.
வேதம் கெட்டு வெறுங்கதை மலிந்தது.
போதச் சுடரைப் புதையலுள் ஆழ்ந்தது.
தலைமையாம் ஞானத்து சதிபல வளர்ந்தன.
எல்லாம் பொருந்திடும் ஏழை மானுடர்
இன்பம் தேடி யலைந்தனர், மடிந்தார்.
கள்ளைநீர் விழுங்கினர் ஊணினைக் கண்டார்.
அமுதம் வேண்டி விடத்தினை யுண்டார்.
ஐய!

வலியரே போருமில் வஞ்சக அரக்கர்!
" "
"

விதியின் பணிதான் விரைக.
மதியின் வலிமையால் மானுட ஜாதிக்கு

வெளி :— ஒருவனைக் கொண்டு இருமை நீ
நித்திய வாழ்விலே நிலைபெறச் செய்

மாநுடச் சாதி பேதங்கள் வழிப்படும்;
மாநுடச் சாதி யொன்று; மனத்திலும்
உயிரிலும் தொழிலிலும் ஒன்றே யாகும்.

தீ:- பாரத கண்டத்தில் பாண்டிய நாட்டிலே
விரதர் தவறிய வேதியர் குலத்தில்
வசுபதி யென்றொரு ஏழைஞன் வாழ்கின்றான்.
தோளிலே வலித்தோன், துயரிலே மலிந்தோன்
நாளும் வறுமை நாடொறு பொருவான்
செயலினை யறியான், தெய்வமுந் துணியான்
ஜய. வசுபதி தப்ப லாயினன்.
இவனைக் காப்போம். இவன் புவி காப்பான்

காற்று:— உயிர் வளம் கொடுத்தேன்;
உயிரால் வெல்க.

இந்தி:— ஆவலை கொடுத்தேன். வசுபதி வாழ்க

சூரியன்:— அறிவாலே யொளியை யளித்தேன்
வாழ்க

தேவர்:—

மேற்றிறம் மறவோம். உண்மையே தெய்வம்.
கவலையை நீக்குதலே வீடு. களியே
அமிழ்தம்; பயன்வரும் செய்கையே யறமாம்
அச்சமே நரகம்; அதனைச் சாடு

செல்வத்தை நமக்கு நல்கிடச் செய்க.
அதனை வசுபதி, மக்கள் தெரிந்து
தவத்தொழில் செய்து தரணியைக் காப்பாய். *

பாண்டிநாட்டில் வெளிப்புறம். காட்சி. வசுபதி
தனியே நிலவைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

வசுபதி பாடுகிறான்:-

நிலவுப் பாட்டு.

வாராய் நிலவே வையத் திறலே
வெள்ளைத் தீயே விண்ணுறும் கடலே
வானப் பெண்ணின் அழகே, ஒளியே
வாராய் நிலவே வா. (1)

மண்ணுக் கெல்லாம் மதுவைக் கூட்டிக்
கண்ணுக் கெல்லாம் களியைக் கூட்டி
எண்ணுக் கெல்லாம் இன்பத் தெளிவாய்
வாராய் நிலவே வா —— (2)

இன்பப் பெண்டுகள் வாழக் காண்போம்
வானொளி தீர்ந்த மண்ணை நாடி:
துன்பந் தீர்க்கப் ~~பெருமை~~ வெண்மதி
வாராய் நிலவே வா.

அச்சப் பேயைக் கொல்லும் படையாய்
வித்தைத் தேனில் விளையும் களியாய்